பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 09 செவ்வாய்க்கிழமை 24.12.2024 | அதிர்வு 145

## இந்திய மீனவர்கள் 17 பேர் இன்று கைது!


(எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி நுழைந்து மீன்பிடித்த 17 இந்திய மீனவர்களை இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கடற்படையினர்

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# பாதாளக் குழுக்களுக்கு முடிவு கட்டியே தீருவோம்

## அநுர அரசு திட்டவட்டம்



பாதாளக் குழுக்களை ஒடுக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத் தில் இன்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

03 ▶

# கிளிநொச்சியில் மதுபானசாலைகளை உடன் மூடக் கோரி ஆர்ப்பாட்டப் பேரணி



கிளிநொச்சி மாவட்டத் தில் அதிகரித்த மதுபான சாலைகளை உடனடி யாக மூடுமாறு கோரி இன்று ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி டிப்போ சந்தி யில் இருந்து ஆரம்பமான பேரணி மாவட்ட செயல கம் வரை சென்று அங்கு மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு மறு வாழ்வு அமைப்பு மற்றும் மது போதைக்கு எதிரான இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட் டப் பேரணி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத் தைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள்பங்கேற்ற இந்த ஆர்ப் பாட்டப் பேரணியில் சர்வ மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சியில் மதுபானசாலைகளை உடன் மூடக் கோரி ஆர்ப்பாட்டப் பேரணி















# தோட்ட மக்களை வெளியேற்றும் முயற்சியைத் தடுத்து நிறுத்துக!

## ஜனாதிபதிக்கு மனோ எம்.பி. அவசர கடிதம்





தோட்டங்களில் வசிக்கும் மக்களை வெளியேற்றும் முயற்சியை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய அவசர கடிதத்தில், இரத்தினபுரி, எகலிய கொடை மற்றும் சன்டர்லேன்ட் தோட்டத்தில் வசிக்கும் ஏழை மக்கள், தோட்ட நிர்வாகத்தால் வெளியேற்றப்பட முயற்சிக்கப்படுவதாக மனோ எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

தோட்டங்களில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த மக்களை நிர்வாகத்தால் வெளியேற்றக் கூடாது எனவும், புதிய காணி உரிமை வழங்கும் முன் அங்கு வசிப்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் தடை உத்தரவை அறிவிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேபோன்ற பல முயற்சிகளை எதிர்த்த தங்கள் போராட்டங்களை நினைவூட்டிய அவர், "மொடர்ன் ஸ்லேவரி" என்று அடையாளம் காணப்பட்டுள்ள தற்போதைய அமைப்பை முற்றிலும் மாற்ற வேண்டும் எனவும் அழுத்தமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் தோட்டங்களில் வாழும் மக்கள், எக்காரணம் கொண்டும், தோட்ட நிர்வாகிகளால் வெளியேற்றப்படக் கூடாது என்ற அவசர தடைப் பணிப்புரையைத் தோட்ட நிறுவனங்களுக்கு ஜனாதிபதி அறிவிக்க வேண்டும் எனவும் குறித்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் களைகட்டும் நத்தார் வியாபாரம்





(கி.வசந்தன்)

வவுனியாவில் நத்தார் பண்டிகை வியாபாரம் களைகட்டியுள்ளது.

உலகம் பூராக இயேசுவின் பிறந்த நாளைக் கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர். அந்தவகையில் வவுனியாவிலும் நத்தார் பண்டிகையைக் கொண்டாடுவதற்காகப் புத்தாடைகள் மற்றும் பட்டாசுகள், கிறிஸ்மஸ் மரங்களை மக்கள் வேண்டிச் செல்வதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





**இந்திய மீனவர்கள்...**

கைது செய்தனர்.

மேற்படி 17 மீனவர்களும் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் அந்த மீனவர்கள் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

கைதான 17 இந்திய மீனவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களான 8 பேர் உள்ளடங்குகின்றனர்.

**பாதாளக் குழுக்களுக்கு...**

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசு என்ற வகையில், பாதாளக் குழுவையும் போதைப்பொருள் கடத்தலையும் எதிர்த்துப் போராடுவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம். ஆனால், ஊடகக் கண்காட்சிக்காக அதனை இரண்டு வார நடவடிக்கைகளில் செய்ய நாம் எதிர்பார்க்கவில்லை.

இதில் பாதுகாப்பு படையினர் படிப்படியாக தலையிட்டு வருகின்றனர். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று மட்டும்தான் சொல்ல முடியும். அதன் முடிவுகளைப் பார்க்க முடியும்.." – என்றார்.



# சேதமடைந்த வீதிகளைப் புனரமைக்க விரைந்து பணிகளை முன்னெடுங்கள்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை

காத்தான்குடி நகர சபைக்கு உட்பட்ட அனர்த்தத்தால் சேதமடைந்து காணப்படும் அனைத்து வீதிகளையும் விரைவாகப் புனரமைப்புச் செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் கே.சிவகுமாரிடம் நேற்று திங்கட்கிழமை (23) கோரிக்கை விடுத்தார்.


இது தொடர்பான கூட்டம் காத்தான்குடி நகர சபை பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.



கலந்துரையாடலில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் கே.சிவகுமார், திட்டத்துக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் எம். திலகரத்னே, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏனைய அதிகாரிகள், காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயசிறீதர், காத்தான்குடி நகர சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.எஸ்.எம். அஸ்பர் உள்ளிட்ட அதிகாரிகள், ஊர் பிரமுகர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

முதல் கட்டமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ள வீதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதித் துறையை செப்பனிடுதல்

இலங்கையில் சீர்குலைவடைந்திருக்கும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு மேனிலை நீதிமன்ற வழக்கு விசாரணை செயன்முறையை மறுசீரமைத்தல், ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தை மறுசீரமைத்தல் ஆகிய மூன்று பிரதான விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, நாட்டின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சியையும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புக்களில் பிரதானமாகக் கருத்தில் எடுக்கப்பட வேண்டியவை இந்த மூன்றும் என்று அந்த அமைப்புச் சுட்டிக் காட்டியுள்ளது.

நீண்ட காலமாக இலங்கையில் சட்டத்தின் ஆட்சி சீர்குலைவடைந்திருக்கின்றது என்பது வெளிப்படையானது. அதனையே அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சிறந்த ஆட்சியியல் நிர்வாகக் கட்டமைப்பை நிறுவுதல் எனும் பொதுவான இலக்கு எட்டப்படுவதற்கு சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்பட வேண்டும். முதலில் அது உறுதிப்படுத்தப்பட்டால் மற்றவற்றை - நாட்டின் முழு நிர்வாகக் கட்டமைப்பையே - ஒழுங்குபடுத்தி விட முடியும்.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டிவது போல முதலில் நாட்டில் வழக்கு விசாரணைகள் முறையான விதத்தில் மறுசீரமைக்கப்பட வேண்டும். வழக்கு விசாரணைகள் வேண்டுமென்றே தாமதிக்கப்பட்டு இழுத்தடிக்கப்படுவது மாற்றப்பட வேண்டும்.

இலங்கையில் நீதித்துறையில் காணப்படும் கால நேர இழுத்தடிப்பே நாட்டின் பல பிரச்சினைகளுக்கு அடிப்படை.

நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கையை இழப்பதற்கு பிரதான காரணம் இதுதான்.

நீதி முறைமைகளை நாடி, உரிய முறையில் செயற்படாமல், குறுக்கு வழிகளிலும் தவறான முறைகளிலும் விடயங்களை மக்களும் சமுதாயமும் அணுகுவதற்கும் கையாள்வதற்கும் அவர்களை அந்தத் திசையில் நெட்டித் தள்ளுவது நீதித்துறையின் முறையற்ற கால இழுத்தடிப்புத் தான்.

'தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதி' ஆகிவிடுகின்றது என்பது நீதித்துறையின் மகா வாக்கியங்களில் ஒன்று.

இலங்கையில் எல்லா விடயங்களிலும் நீதித்துறை கும்பகர்ண தூக்கத்தை விட்டு எழுவதற்கு நீண்ட காலம் செல்லும் என்பது மக்களின் மனதில் ஆழமாக பதிந்த கருத்தியல் ஆகும். அதனால் விடயங்களை நீதி முறையில் கையாளாமல் தவறான பாதைகளை - மார்க்கங்களை - முறைமைகளை - நோக்கி மக்கள் தள்ளப்படுகிறார்கள்.

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமல்ல நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' என்பது நீதி த்துறையின் மற்றொரு மகா வாக்கியம்.

இலங்கையில் நீதி விடயங்கள் உரிய காலத்தில் - தாமதமின்றி - விரைந்து - கிட்டும் என்ற நம்பிக்கை வெளிப்படையாக மக்களுக்கு ஏற்படக்கூடிய விதத்தில் நீதித் துறை மறு சீரமைக்கப்பட வேண்டும். அதைச் செய்தால் மாத்திரமே மக்களுக்கு நீதித்துறை மீது நம்பிக்கை ஏற்படும். நாட்டில் சட்டத்தின் ஆட்சியும் சாத்தியமாகும்.

அதற்கு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்துவது போல நாட்டின் நீதிமன்ற வழக்கு விசாரணை செயன்முறையை மறுசீரமைத்தல் அத்தியாவசியமாகும்.



# தலைவர்களை உருவாக்கும் தலைமைத்துவப் பயிற்சிகள்



விசன் நிறுவனம் மற்றும் லண்டன் ரட்ணம் நிதியத்துடன் இணைந்து தென்மராட்சி வலயத்துக்கு உட்பட்ட றிபேர்க் கல்லூரி மற்றும் நாவற்கு-ளி மகா வித்தியாலயம் ஆகிய பாட சாலைகளைச் சேர்ந்த 37 இளம் தலைவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சியை நடத்தியது.

தென்மராட்சி வலயத்தில் நடத் தப்பட்ட இந்தத் தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறையில் தரம் 6, 7, 8, 9 இல் கல்வி கற்கும் மாணவர்கள் தலைமைத்துவம் சார்ந்த பங்கேற் றல் முறை செயற்பாடுகளில் பயிற்று விக்கப்பட்டனர்.

மாணவர்களின் சுய விழிப்புணர்வு, தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பல், தலைமைத்துவம், குழுச் செயற்பாடு, தொடர்பாடல், திட்டமிடல், நேர முகா மைத்துவம் மற்றும் முன்வைப்பு திறன் சார்ந்த திறன் விருத்திக்கும், தனிப் பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்புக்கும் இந்தப் பயிற்சி ஒரு வாய்ப்பாக அமைந்தது.

ஐந்து நாள்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் சிறந்த முறையில் மாணவர்கள் தங்களது தலைமைத் துவம் சார்ந்த துலங்கல்களை வெளிப் படுத்தியிருந்தார்கள். குறிப்பாக, பயி லுனர்கள் நாளாந்த செயற்பாடுகளை எவ்வாறு திட்டமிட்டு, ஒழுங்கமைத்து செயற்படுகின்ற வழிப்படுத்தலை பெற்றுக் கொண்டனர். இப்பயிற்சி யில் ஒவ்வொரு மாணவரும் தமக்கான சுயவிருத்தி திட்டம் ஒன்றை வடிவமைத் தமை இப்பயிற்சி நெறியின் சிறப்பை மேம்படுத்தியது.

தென்மராட்சி வலயத்தின் ஆலோ சனை மற்றும் ஒருங்கிணைப்புடன், நடத்தப்பட்ட இந்த பயிற்சி பட்டறை, விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் விசன்ஸ் நிறுவனத்தின் ஏனைய நான்கு பயிற்சியாளர்களின் நெறிப் படுத்தலுடன் நடத்தப்பட்டது.





# வடக்குக் காணி அலுவலகம் கிளிநொச்சி புதிய கட்டடத்தில்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண காணி ஆணை யாளர் அலுவலகம் எதிர்வரும் 3ஆம் திகதியில் இருந்து கிளிநொச்சி யில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

வடக்கு மாகாண காணி ஆணை யாளர் அலுவலகம் தற்போது யாழ்ப் பாணத்தில் இயங்கி வருகின்றது. இதற்கான புதிய அலுவலகம் ஒன்று கிளிநொச்சி நகரில் பிரதான தபாலகம் அருகில் அமைக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட அலுவல கம் எதிர்வரும் 3 ஆம் திகதி திறக்கப் பட்டு அன்றிலிருந்து கிளிநொச்சி யில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

புதிய கட்டடத்துக்கான அடிக்கல் 4 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய மாகாண காணி ஆணையாளர் குகநாத னால் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# வாண்மை விருத்திச் செயலமர்வு



(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண கலை இலக்கிய உறுப்பினர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு நேற்று திங்கட்கிழமை (23) மட்டக்களப்பில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ச. நவநீதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறைமாவட்டத்தில் இருந்து எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர்.

# வெள்ள அகதிகளுக்கு நுளம்பு வலைகள்; கல்முனை நகர லயன்ஸ் கழகம் ஏற்பாடு!







( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த பாண்டிருப்பு மேட்டு வட்டை மக்களுக்கு கல்முனை நகர லயன்ஸ் கழகம் ஒரு தொகுதி நுளம்பு வலைகளை இன்று வழங்கி வைத்தது .

கல்முனை நகர லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கணபதிப்பிள்ளை இதயராஜா தலைமையில் இன்று (24) செவ்வாய்க்கிழமை இந்த நிகழ்வு இடம் பெற்றது.

லயன்ஸ் கழக வலயத் தலைவர் பொறியியலாளர் லயன் எம் .சுதர்சன் உட்பட கழக உறுப்பினர் கலந்து கொண்டார்கள்.

பத்து லட்சம் ரூபா பெறுமதியான சுமார் 100 நுளம்பு வலைகளை கல்முனை நகர லயன்ஸ் கழக உறுப்பினர் சட்டத்தரணி லயன்.எஸ். சசிராஜ் (திருக்கோவில்) அன்பளிப்பாக வழங்கி வைத்தார்.

# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு முன் விடுதியில் தூக்கில் தொங்கிய குடும்பஸ்தர் மீட்பு!

( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள விடுதி அறை மலசல கூடத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலமாக நேற்று (23) திங்கட்கிழமை மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் அப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்தவர் என்றும் அவர் பெரிய நீலாவணை 02 செல்லத்துரை வீதியில் வசித்துவரும் 2 பெண் பிள்ளைகளின் தந்தையான 54 வயது மதிக்கத்தக்க பூசாரி சந்திரன் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர் மேற்கொண்டார்.

மேலதிக விசாரணைகளைக் கல்முனை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# சம்மாந்துறை பிரதேசத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம்

(கே. எ. ஹமீட் )

சம்மாந்துறை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இன்று (24) ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபாவின் ஒருங்கிணப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எம்.மஞ்சுல ரத்னாயக்க, எம்.எஸ். உதுமாலெப்பை, எம்.ஏ.எம் தாஹீர், கே.கோடிஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம் நிசாம் காரியப்பர், அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்திக அபேவிக்ரம, மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர், பிரதம கணக்காளர் ஏ.எல் மஹ்ரூப், உதவி பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி



ஏ.எல்.எம். அஸ்லம், திணைக்களங்களின் தலைவர்கள் பிரதேச செயலகத்தின்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சம்மாந்துறை பிரதேச நீர்பாசனப் பிரச்சினைகள், சம்மாந்துறை வைத்தியசாலை காணி விவகாரம், ஜமாலியா பாடசாலை மாற்று காணி விடயம், மாவடிப்பள்ளியில் உடனடியாக பாலம் அமைப்பது சம்மந்தமான தீர்மானம், விவசாய காணி சம்மந்தமான பிரச்சினைகள், நீர்ப்பாசன பிரச்சினைகளுக்கான முறைப்பாடுகளும் தீர்வுகளும் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டன.

# கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அரிசிப் பொதிகள் பகிர்ந்தளிப்பு





(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் ஊடாக காலி உனவட்டுன பிரதேசத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் 50 இற்கும் மேற்பட்ட வறிய குடும்பங்களுக்கு கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு இன்று (24) இலவசமாக அரிசிப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதனை ஏற்பாடு செய்த காலி உனவட்டுன பிரதேசத்தைச் சேர்ந்த நிஹால், ஆஸ்ரேலியாவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளுடன் இணைந்து அரிசிப் பொதிகளைப் பயனாளிகளுக்கு வழங்கினார்.



# கிழக்கு மாகாண ஆளுநருடன் சமூக சேவை உத்தியோகத்தர் சந்திப்பு

(சியாத்.எம்.இஸ்மாயில்)

கிழக்கு மாகாண சமூக சேவை உத்தியோகத்தர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோருக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சமூக சேவை உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் செயலாளர் ஏ ஜீ. அர்ஸாத், உயர்பீட குழு உறுப்பினர்கள் ஏ. அஹமட் சபீர், பீ.ராஜ்மோகன், ஏ.எல். பைசாத், எம்.எம்.எம். ஜெய்சான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது சமூகசேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் பொது மக்களுக்கான சேவைகளை மேம்படுத்தல் தொடர்பிலான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.



# சாய்ந்தமருது பிரதேசத்தில் உணவகங்களில் சோதனை

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பிரிவுகளில் உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் திடீர் களப் பரிசோதனைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸதீன் ஆலோசனைக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் அடங்கிய குழுவினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது முறையற்ற வகையில் உணவு தயாரிக்கும் மூன்று நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

டெங்கு பரவும் வகையில் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருந்தவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்த திடீர் களப் பரிசோதனையின் போது மூன்று ஹோட்டல்கள், ஒரு உணவகம், மரக்கறி விற்பனை நிலையங்கள் மற்றும் பழக்கடை போன்றனவும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.

மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தவும், ஆரோக்கியத்தை கவனத்தில் கொண்டும் எங்கள் பணி தொடரும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தெரிவித்தார்.

# அநுராதபுரத்தில் பாரிய மரங்களை வெட்டிய இரு சந்தேக நபர்கள் கைது



அநுராதபுரம், கட்டுகலியாவ கல்பொத்தேகம பிரதேசத்தில் உள்ள கடுகம்பளைகம காப்புக்காடு பகுதியில் பாரிய மரங்களை வெட்டி மொரகொல்லாகம ஏரிக்காப்புக்குள் பிரவேசித்த இரு சந்தேக நபர்கள் பேக்ஹோ, உழவு இயந்திரம் மற்றும் வெட்டப்பட்ட மரங்களின் கையிருப்புடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அநுராதபுரம் தள வன அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் கல்பொத்தேகம மற்றும் கல்பாலம பிரதேசத்தில் வசிக்கும் 42 வயதுடைய சந்தேக நபர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சோதனையின் போது இரண்டு சந்தேக நபர்கள் வெட்டப்பட்ட பெரிய மரங்களை பைக்ஹோ உதவியுடன் உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டிருந்தனர் என்றும் அதன்போதே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சோதனையின் போது, சந்தேக நபர்கள் வசம் இருந்த பதினைந்து மரக்குற்றிகளும், 10 முதல் 15 அடி சுற்றளவு கொண்ட ஒன்பது பெரிய மரங்களும் மீட்கப்பட்டன.

மரக்குற்றிகள் மற்றும் பெரிய மரங்கள் மரக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டன என்று வனப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# பனிப்பொழிவால் இமாச்சலில் சிக்கிய 1000 இற்கும் மேற்பட்ட வாகனங்கள்



ஹிமாச்சலப் பிரதேசத்தின் மணாலியில் பனிப்பொழிவு காரணமாக நேற்று பல வாகனங்கள் சிக்கிக்கொண்டன என தெரிவிக்கப்படுகிறது.

அடர்ந்த பனிப்பொழிவு காரணமாக ரோஹ்தாங்கின் சோலாங் மற்றும் அடல் சுரங்கப்பாதையில் சுற்றுலாப் பயணிகளும், பயணிகளும் பல மணிநேரம் தங்களின் வாகனத்தில் சிக்கித் தவித்தனர்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் நீண்ட போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொண்டன. மீட்பு நடவடிக்கையை தொடங்கவும், சுமார் 700 சுற்றுலாப் பயணிகளை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றவும் பொலிஸார் விரைவான நடவடிக்கையை எடுத்திருந்தனர்.

உள்ளூர் அதிகாரிகளும் மீட்புப் பணிகளை ஒருங்கிணைத்தனர்.

இருப்பினும், பனிப்பொழிவு மாநிலத்தின் மற்ற பகுதிகளை குளிர்கால அதிசய நிலங்களாக மாற்றியது.

ஹிமாச்சலின் பனி படர்ந்த மலைப் பகுதியில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டை கொண்டாட சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது.

பனிப்பொழிவு அழகின் காணொளிகள் சமூக வலைதளங்களில் பரவி மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இதனிடையே, எதிர்வரும் வியாழன் வரை நடுத்தர, உயரமான மலைப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசான மழை மற்றும் பனிப்பொழிவு இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு நிலையம் கணித்துள்ளது.








# குஜராத்தில் அம்பேத்கர் சிலை சேதம்; எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டம்





குஜராத் மாநிலம், அகமதாபாத் நகரின் கோக்ரா பகுதியில் இயங்கி வரும் ஸ்ரீ கே.கே. சாஸ்திரி கல்லூரிக்கு முன்னால் உள்ள அம்பேத்கரின் சிலை நேற்றைய தினம் மர்ம நபர்களினால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், சி.சி.டி.வி. காட்சிகளின் அடிப்படையில் குற்றவாளிகளைத் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகாராஷ்டிராவின் பர்பானி நகரில் அம்பேத்கரின் சிலைக்கு முன் அரசமைப்பின் முன்னுரையை எரித்த மர்ம நபரால் அங்கு கலவரம் நடந்து வரும் நிலையில் குஜராத்திலும் அம்பேத்கர் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளமை பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.



# தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு தினம்

தந்தை பெரியாரின் 51ஆவது நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு சென்னை அண்ணா சாலையில் உள்ள பெரியார் சிலைக்கு கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அதனை தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், சேகர்பாபு, சாமிநாதன், சென்னை மேயர் பிரியா, தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தி.மு.க. எம்.பி.க்கள், தி.மு.க. மூத்த நிர்வாகிகள் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பெரியார் நினைவு தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவது பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.



# ஹமாஸின் அரசியல் தலைவர் கொல்லப்பட்டதை முதன்முறையாக ஒப்புக்கொண்டது இஸ்ரேல்!

ஹமாஸின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே, தெஹ்ரானில் வைத்துக் கொல்லப்பட்டமையினை இஸ்ரேல் முதன்முறையாக ஒப்புக் கொண்டுள்ளது.

இதன்படி, இஸ்மாயில் ஹனியே கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப் பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்டார் என இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இஸ்மாயில் ஹனியே தங்கியிருந்த கட்டடத்தின் மீது பரவலாக நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளார் என குறிப் பிடப்படுகிறது.

இதனிடையே, ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான போர் நிறுத்தம் குறித்து பல்வேறு கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன.

இதன்படி, ஹமாஸ்/டனான போர்நிறுத்தத்தை ஒப்புக்கொள்வதில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், உடன்படிக்கை எட்டப்படும் காலத்தினை குறிப்பிட முடியாது எனவும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பேச்சுவார்த்தை 90 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக பாலஸ்தீனிய சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 58 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் வைத்தியசாலையில்!

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

78 வயதான பில் கிளிண்டன் உடல்நலக் குறைவு காரணமாக மெட்ஸ்டார் ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து அவர், சிகிச்சை மற்றும் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என அவரது செய்தித் தொடர்பாளர் சி.என்.என். செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.



1993 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமெரிக்காவின் 42 ஆவது ஜனாதிபதியாக பணியாற்றிய கிளிண்டன், கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியான உடல்நலப் பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளார்.

இதன்படி பில் கிளிண்டன் கடந்த 2021 ஆம் ஆண்டில் சிறுநீரக நோய்த் தொற்றால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அத்துடன், அவர் 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இருதய அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

பக்கங்கள் - 03

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 24/12/2024

## 20 மில்லியன் டொலர் பணப்பரிசு வென்ற நபர்

கனடாவில் நபர் ஒருவர் சுமார் 20 மில்லியன் டொலர் பணப் பரிசு வென்றுள்ளார்.

C2▶




# கனடாவின் பொருளாதாரம் ஒக்டோபரில் 0.3 வீதம் வளர்ச்சி

2024 செப்டம்பரில் 0.2 சதவீத அதிகரிப்பை தொடர்ந்து, கடந்த ஒக்டோபர் மாதம் கனடாவின் பொருளாதாரம் 0.3 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாக அந் நாட்டு புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

சுரங்கம், குவாரி, எண்ணெய் மற்றும் எரிவாயு பிரித்தெடுத்தல் துறையில் பலம் பெற்றதன் மூலம் ஒக்டோபர் மாதத்தில் பொருளாதாரம் வளர்ச்சி கண்டது.

சுரங்கம், குவாரி, எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பது ஒக்டோபரில் 2.4 சதவீதம் உயர்ந்தது, இவற்றில் எண்ணெய் மற்றும் எரிவாயு பிரித்தெடுத்தல் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியது இது 3.1 சதவீதம் அதிகரிப்பாகும்.

அது தவிர, சேவைகள் உற்பத்தி செய்யும் தொழில்கள் மாதத்திற்கு 0.1 சதவிகிதம் வளர்ச்சியடைந்ததால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டதாக புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இது வருடத்தில் ஐந்தாவது மாத பொருளாதார அதிகரிப்பு ஆகும்.

# ரொறன்ரோவில் அதிக பனிப்பொழிவு; சுற்றாடல் திணைக்களம் எச்சரிக்கை



கனடா – ரொறன்ரோ பகுதியில் அதிக பனிப்பொழிவு காணப்படுவதாக கனேடிய சுற்றாடல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், ரொறன்ரோ உட்பட சில பகுதிகளில் போக்குவரத்து மேற்கொள்வது தொடர்பிலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சில இடங்களில் ஐந்து முதல் பத்து சென்டிமீட்டர் வரையில் பனிப்பொழிவு ஏற்படும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

C2▶




# கனடாவில் வாயு கசிவு; 10 பேருக்குப் பாதிப்பு




கனடாவில் வாயு கசிவு காரணமாக பத்து பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டாவாவின் வெனியர் மாவட்டத்தின் கிரென்வில் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. கார்பன் மொனொக்ஸைட் வாயு கசிவு ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வாயு கசிவு காரணமாக ஆறு பெரியவர்களும் நான்கு சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

---

**20 மில்லியன்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவின் ஹமில்டன் பகுதியில் இந்தப் பணப்பரிசு வென்றெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற லொத்தர் சீட்டிலுப்பில் யார் வெற்றியாளர் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.

லொட்டோ மெக்ஸ் லொத்தர் சீட்டிலுப்பில் இவ்வாறு பணப்பரிசு வென்றெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

---

**ரொறன்ரோவில் அதிக...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், வீதிகள் வழுக்கும் தன்மையுடன் காணப்படும் என்பதால் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், அதிக பனிப்பொழிவினால் வாகன சாரதிகள் வீதியை பார்ப்பதில் சிரமங்கள் ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.







# பிரிட்டிஷ் கொலம்பியாவில் மண் சரிவில் சிக்கி 3 பேர் பலி

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் மண் சரிவில் சிக்கி மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வாரம் மாகாணத்தின் சில இடங்களில் சீரற்ற காலநிலை காரணமாக பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. மண் சரிவு நிலைமையினால் சிலர் காணாமல் போயிருந்தனர்.

வாங்கூவாரின் வடக்கு பகுதியான லயன்ஸ் பேய பகுதியில் மண் சரிவு ஏற்பட்டிருந்தது.

இந்த மண் சரிவு காரணமாக வீதி போக்குவரத்தும் பாதிக்கப்பட்டு இருந்தது.

மண்சரிவில் சிக்கி காணாமல் போனவர்களை கண்டறிவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.





